செ.வெ.எண்:15 நாள்: 13.01.2020

**கோயம்புத்தூர் மாவட்டம்**

# மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

---

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் திங்கட்கிழமை தோறும் நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று(13.01.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராமதுரைமுருகன், துணை இயக்குநர்(கலால்) திருமதி.கலைவாணி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(கணக்கு) திருமதி.சுஜாதா, உதவி இயக்குநர்(நில அளவை) திரு.தவமணி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திரு.பிரபாகரன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திருமதி.மணிமொழி மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை பட்டாமாறுதல், புதிய குடும்ப அட்டை, வீட்டுமனைப்பட்டா உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்த மனுக்களை பொதுமக்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்களிடம் அளித்தனர். பொதுமக்களிடமிருந்து 176 மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை வழங்கி குறித்த காலத்திற்குள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

அதனை தொடர்ந்து, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலதுறையின் மூலம் நல அலுவலகத்தின் சார்பாக கிறிஸ்துவ மகளிர் உதவும் சங்கத்தின் வாயிலாக 17 பயனாளிகளுக்கு தலா ரூ.5000/- வீதம் 85,000/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை காசோலையாகவும், மாவட்ட ஆட்சித்தலைவரின் தன்விருப்ப நிதியிலிருந்து ஒரு பயனாளிக்கு சுயதொழில் துவங்க ரூ.20,000/- என மொத்தம் 18 பயனாளிகளுக்கு ரூ.1,05,000/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் வழங்கினர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர் மாவட்டம்.**